அகல்யா

(ஓர் இனிய காவியம்)

T. D. மீனாட்சிசுந்தரம் B. A., B. L.

அகல்யா

T. D. மீனாட்சிசுந்தரம் B. A., B. L.

★

★

வண்டமிழ் நிலையம்,

திருச்சிராப்பள்ளி.

முதற் பதிப்பு—1953

உரிமையுடையது

விலை ரூ. 1—0—0

சிட்டி பிரஸ், மதுரை ரோடு, திருச்சி.

பதிப்புரை

அகல்யா அழகின் வடிவம். கௌதம முனிவரின் கருத்திற்கினிய பத்தினி. இந்திரன் அவள்பால் இச்சை கொண்டு பிழைபுரிகிருன். இறுதியில் முனிவரின் சாபத்திற்குள்ளாகிருன். அகல்யாவும் கல்லுருவாகச் சபிக்கப் பெறுகிருள். இது புராணக்கதையின் சுருக்கம்.

இப்புராணக் கதையின் போக்கை நம் கவிஞர் திரு. T. D. மீனுட்சிசுந்தரம், பி. ஏ., பி. எல். ரிஜிஸ்ட்ரார் — அண்ணுமலை யுனிவர்சிடி, தம் கற்பனைத் திறனுக்கேற்ப, அறிஞர்கள் அனைவரும் ஒப்புக்கொள்ளும் வகையில், வெகு அழகாகச் சற்று மாற்றியமைத்திருக்கிருர். புராணக் கதையின் மூலம் சிதைவுரு வண்ணம், கதைப் போக்கைத் தம் கற்பனைத் திறனுக் கேற்றவாறு மாற்றியமைக்கும் சக்தி கவிஞர்களுக்கும், கலைஞர்களுக்குமே உரியது. கற்பனைச் சிகரத்தின் உச்சியில் நின்று, பல கோணங்களிலும் கலைச் சுடர்களை ஒளிவீசச் செய்பவர்கள்தானே உண்மையான கவிஞர்கள், கலைஞர்கள். வடமொழியிலுள்ள வால்மீகி இராமாயணத்தைக் கவியரசர் கம்பர் தமிழில் பல மாற்றங்களுடன் தானே சுவை குன்ருமல் பாடியிருக்கிருர்?

அகல்யாவையும், கௌதமரையும் அன்பின் பிணைப்பான இன்பக் காதலர்களாக்கி, அவர்களைக் கலை வாழ்வின் உன்னத இரு சின்னங்களாக நம் கவிஞர் சிருட்டித்திருக்கிருர். இந்திரன் காம இச்சை கொண்டு கருத்தழிந்து செய்யும் அடாத செய்கையும், அதனுல் கௌதமரின் அடங்காத சீற்றத்திற்காளாவதும், இறுதியில் கலைத் தம்பதிகள் தேவர்களின் உதவியால் இணைவதும் கலைக்

கண்கொண்டு கவிதை யின்பத்துடன் படிக்கும் அன்பர்கள் ஒவ்வொருவருடைய சிந்தனைக்கும் நல்ல விருந்தாகும்.

கவிதைத்தேன் பொங்கி வழியும் கருத்துயர்ந்த பாடல்களால் 'அகல்யா' அணி செய்யப்பெற்றிருக்கிறாள். பாடல்களின் நயமும், கற்பனையும் நம் உள்ளத்தில் நன்கு ஊடுருவிப் பாய்வனவாகும். நம் கவிஞரின் 'அகல்யா' வைக் கலையுணர்விற் சிறந்த நம் தமிழகப் பெருமக்கள் களிகூர்ந்து வரவேற்பார்களென்று நம்புகிறோம்.

அறிஞர் பெருமக்களாலும், பத்திரிகைகளாலும் பாராட்டப் பெற்ற நம் கவிஞர் திரு. T. D. மீனாட்சி சுந்தரம் எழுதிய 'கலைவாணி' என்னும் நாடகத்திற் கடுத்ததாக மூன்றாவது வெளியீடாக அவரது கவிதை ஓவியமான 'அகல்யா' வை மிகவும் பெருமையுடன் தமிழ் நாட்டிற்கு அறிமுகப்படுத்தி வைக்கிறோம்.

திருச்சி,
27—3—53.

வண்டமிழ் நிலையத்தார்.

அணிந்துரை

வித்வான் ஜி. சுப்பிரமணிய பிள்ளை, எம். ஏ., பி. எல்.
அண்ணமலை சர்வகலாசாலை ஆராய்ச்சித்துறைப் பேராசிரியர்.

காவியப் பூஞ்சோலையிலே அகல்யா கண்கவரும் ஒரு வண்ணமலர். அம்மலரைக் கிழித்தெறிந்து காலால் சமட்டினன் இந்திரன். அதனைப் புழுதியிற் புரளவிட்டார் வால்மீகி. அதனைக் கண்ட கவிச்சக்ரவர்த்தி கம்பர் கவலை கொண்டார். அம்மலரை எடுத்துப் புழுதியைத் துடைத்து ஒரு கல்லின் மீது இட்டு வைத்தார். அவர் எத்தனை துடைத்தும், விழுந்த மலர் திருந்துவதற்கில்லை. பின்னல் வந்த புலவர் பெருமகனர் வெ. ப. சுப்பிரமணிய முதலியார் கம்பர் கல்லிடையிட்டு வைத்த அகல்யா மலருக்குப் புது மணம் ஊட்டிப் புத்துயிர் அளிக்க முயன்ருர். இதற்காக அவர் ரோம் நாட்டிலிருந்து லுக்கிரீஷியா என்ற நறிய வாசனைத் திரவியத்தைக் கொண்டு வந்து அகல்யா மலரைத் தோய்த்து வைத்தார். கல்லின் மேற் கிடந்த மலர் நறுமலர் ஆயிற்று. ஆனல் அதற்கு ஒளி ஏற்படவில்லை. இதனை உணர்ந்தார் பாலபாரதி, சுப்பிரமணிய யோகியார். அதற்குப் புது நிறமும் ஏற்றிக் கொடுத்தார். என்னதான் நிறம் இருந்தாலும், மணம் இருந்தாலும், கல்லிலே விழுந்த மலர் வாடித்தானே கிடக்கும். அது உயிரற்று வாடிக் கிடப்பதைக் கண்டு வருந்தினர் கவிஞர் மீனட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள். இந்திரன் எட்டிப் பறித்த தால் எழில் குன்றியது மலர். கல்லிலே கிடந்ததால் கவின் இழந்தது மலர். எட்டாத கொம்பிலே ஏற்றிவிட்டால் எழில் காட்டி உயிர் பெறும் அல்லவா அந்த மலர்? பிள்ளை அவர்கள் மலரினைக் கையிலே எடுத்தார்கள். அதன் தூசினைத் துடைத்து மாசினை மாற்றினர்கள். இந்திரனுக்

கும் எட்டாத கொம்பிலே ஏற்றினர்கள். கவிதைக் கௌதமனும் மரத்திலே ஒட்டவைத்தார்கள். கவிஞரின் கற்பனைத் திறனாலும், கவிதைப் புதுமையாலும், அகல்யா ஓர் அழியாத உயிரோவியமாய், சித்திரத்தின் அலர்ந்த தோர் செம்மணி நறுமலராய் உலவாது உயிர்பெற்று ஒளி விட்டு ஓங்கி வளரத் தொடங்குகிருள் இக்காவியத்தில்.

நான்முகன் படைத்த சோதிச்சுடர் நங்கை அகல்யா. அவளை இந்திரன் காமுற்ருன். ஆனல் இந்திரனுக்கு அவள் எய்தவில்லை. கௌதம முனி தனது கூர்த்த மதி யால் அகல்யாவை மணந்து அவள் கணவர் ஆகிருர். காமத்தீயால் கரைந்துருகிய இந்திரன், கௌதமர் இல் லாத வேளையில் அகல்யாவை அணுகிருன். அகல்யாவும் இசைந்து கூடுகிருள். அதை அறிந்த கௌதமர் அகல் யாவைக் கல்லாகச் சபிக்கிருர். பின்னல் இராமன் கால் பட்டு அகல்யா கல்லுருவம் நீங்குகிருள். கௌதமரும் கோபம் தணிந்து மனைவியை ஏற்றுக்கொள்கிருர். இது வால்மீகி கண்ட கதை.

கம்பருக்கு இது மனம் ஒப்பவில்லை, ஒரு சிறிய திருத் தம் செய்து பார்த்தார். இந்திரன் கௌதமர் வடிவில் வந்ததால், தன் கணவர் என்றே முதலில் நம்பி இணங் கினள் அகல்யா. பிறகு அவன் இந்திரன் என்பதைத் தெரிந்து கொள்கிருள். அவ்வாறு தெரிந்தும் அவனை வெறுத்துத் தள்ளாது, சிறிது சபலம் காட்டி, இசைந்தே இருக்கிருள். அவ்வேளையில் கௌதமன் வந்து கண்டு கொள்கிருன். இவ்வளவு தான் கம்பரால் செய்ய முடிந்தது. இக்கதையில் அகல்யாவின் மனம் முதலில் தூயதாயிருப் பினும், பின்னல் அழுக்கேறி விடுகிறது. நம்மால் அகல் யாவைக் கண்டு அருவருக்காமல் இருக்க முடியவில்லை.

இதைக் கண்ட வெ. ப. சு. முதலியார் நன்கு செப்ப னிடத்துணிந்தார். இந்திரனின் காமவெறியைக் கண்ட அகல்யா சற்றும் மனம் இணங்காமல் அவனை எவ்வளவோ

தடுத்து நிறுத்துகிறாள். அவள் போராட்டம் பயன் அளிக்க வில்லை. மூர்ச்சையால் விழுகிறாள். இந்திரன் அவள் கற்பை அழித்துச் செல்கிறான். அவள் உள்ளம் தூய தாகவே இருக்கிறது. ஆனால் உடல் மாசுபடுகிறது.

இதற்கு இன்னொரு மாற்றம் கொடுத்தார் கவி யோகி யார். கௌதமர் உருவில் வந்த இந்திரனைத் தனது கணவர் எனவே நினைந்து விழைந்து கூடுகிறாள் அகல்யா. அவன் அயலான் என்பதைத் தெரிந்துகொள்ளவே இல்லை. கௌதமர் வந்து இந்திரன் பூனையாய்ப் பதுங்கும் போது தான் அவளுக்கு உண்மை தெரிய வருகிறது. இங்கும் அகல்யா உள்ளத்தால் தவறு இழையாதிருந்தும், உடல் மாசு பட்டவளேயாம்.

இக்கதையிலுள்ள இத்தகைய அழுக்குகளை யெல்லாம் அறவே போக்கி, தமிழ் மரபுக்கும் தமிழ் உள்ளத்திற்கும் உகந்த விதமாய் அகல்யாவை ஒரு பழுதுபடா ரத்தின மாய்ச் சித்திரிக்க முயன்றார்கள் கவிஞர் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள். அதன் விளைவாகவே இந்நூல் பிறந்தது. அவர்கள் கருத்தைக் கவர்ந்த கவிதைக் கொழுந்தாகிய அகல்யா எத்தகையவள்? இந்திரனை அவள் இளமை யிலேயே தெரிந்திருந்தாள். நட்பும் கொண்டாள். ஆனால் காதலிக்கவில்லை. பின்னர் கவிபாடும் கலைவல்ல இளைஞன் ஒருவனைக் கண்ணுற்றாள். அவன் தான் கௌதமன். இருவரும் காதல் வலைப்படுகின்றனர். கௌதமன் அகல் யாவை மணந்து கொள்கிறான். அவர்கள் வாழ்க்கை இன்பச் சுழலிலே வளைந்தோடுகிறது. ஒரு நாள் அகல்யா நீராடி வருகையில் இந்திரன் குறுக்கிட்டுத் தன் ஆசையை விளம்புகிறான். அவள் அவனை மறுத்துக் கடிந்து விரட்டு கிறாள். அவ்வேளையில் கௌதமன் அகல்யாவைத் தேடி வருகிறான். இந்திரன் செயலை அறிவித்துத் தன் கணவன் மனதைப் புண்படுத்தக் கூசிக் கூறாது விடுகிறாள் மனைவி. கௌதமன் மனதில் ஐயம் தோன்றியது. அவன் அதைக் காட்டிக்கொள்ளவில்லை. அன்றிரவு நடுநிசியில், கௌதமன்

இல்லாத வேளையில் இந்திரன் புகுந்து படுத்துக் கிடந்த அகல்யாவைப் பாடுபடுத்த முயல்கிறான். அவள் சீறி யெழுந்து அவனைத் தடுக்கிறாள். இருட்டிலே இந்திரன் வலிந்து அவள் கையைப் பற்றுகிறான். அவள் அவனைத் தள்ளுகிறாள். அவ்வேளையில் கௌதமன் தோன்றி விளக்கை ஏற்றுகிறான். இந்திரன் நடுங்கிக் கொண்டே அகல்யாவின் கையை விடுகிறான். அகல்யா உள்ளத்தா லும், உடலாலும் தூயவளாகவே இருக்கிறாள். கணவனைத் தெய்வமாகவே கருதுகிறாள். ஆனால் கௌதமனுக்கு மாலை யில் எழுந்த சந்தேகம் இப்பொழுது உண்மை என்றே பட்டுவிடுகிறது. அகல்யா தன்னைப் பொய்த்தாள் என்று எண்ணிச் சபித்துவிட்டுப் போகிறான். பின்னர் இராமன் வந்த காலத்தில் அகல்யாவின் வாயிலாக உண்மை விளங்கு கிறது. கௌதமன் மட்டுக் கடங்காத மகிழ்ச்சியுடன் மனைவியை ஏற்றுக் கொள்கிறான். அகல்யா அணையாத சோதியாய் எழில் விடுகிறாள்.

செந்தமிழ்ச் செல்வராகிய திரு. மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் ஒரு சிறந்த கலா ரசிகர், நூலாசிரியர், நாடகாசிரியர், ஓர் உயர்ந்த கவிஞர். அவர்கள் இதற்கு முன் நூற்றுக்கணக்கான பாடல்கள் இயற்றியுள்ளார்கள். அவர்கள் எழுதிய 'கலைவாணி', 'ஓவியம் செய்த வேலை' போன்ற நாடகங்கள் தமிழ் உலகை என்றும் களிப்பூட்டக் கூடிய அழியாத புலமைப் படைப்புக்கள். அகல்யா என்னும் இச்சிறு காவியம் யாவரும் படித்து மகிழக் கூடிய ஒரு சுவை நிறைந்த நூல். அதன் இனிமையும், எளிமை யும், அமுதுகுத்தனைய தமிழிசைப் போக்கும், சொல் நடை யும், பொருள் ஆழமும் நமக்கு உவட்டா விருந்தாய் மகிழ்விக்கக்கூடியன. இன்னும் அவர்கள் இது போன்ற பல அழகிய கவிதைகளையும், நூல்களையும் உலகுக்கு அளித்துத் தமிழை வளர்க்கும்படி இறைவன் திருவருள் புரிவானாக.

முன்னுரை

அகல்யாவின் கதை கவிதா உள்ளத்தைக் கவரும் ஓர் அற்புதச் சித்திரம். கவிமனம் விரிந்து ஆட, கற்பனை பெருகி ஓட, கருத்துக்கள் கொட்டி அமைக்க—இத் தேனெல்லாம் தொகுத்து வைக்கக்கூடிய ஒரு தீஞ்சுவைக் கூடு.

இக்கதையில் ஒரு சுவர்க்கத்தையே பிறப்பித்து விடலாம். சூது, வாது, பொய், களவு இவைகட்கு உறைவிடமாகிய உலகை விட்டு ஒரு அழகிய குடிலுக்கு வருகிறோம். இங்கு நாம் காண்பன—இயற்கை எழில் பரப்பு. கண்களைச் சொக்கி வீழ்த்தும் வனப்பு மிக்க தோற்றங்கள். கவிஞனுக்குக் களிப்பூட்டும் கவின் காட்சிகள். இவை மட்டுமின்றி இவைகளுக் கெல்லாம் வைரமுடி போன்று விளங்கும் உண்மைக் காதல். உயிர்க் காதல். எங்குமே அழகு மயம். எங்குமே இன்ப மயம். எங்குமே காதல் மயம். வாழ்க்கை வாழ்வதற்கே. இது தான் கதையின் முற்பகுதி—எழில், இன்பம், காதல்.

கதையின் பிற்பகுதி துன்பக் கோலமே. கதையின் கடைசியில் தான் உண்மையின் வெற்றியைக் காண்கிறோம். உண்மைக் காதலின் உயர்வைக் காண்கிறோம். காதல் இன்பத்தின் உச்சியைக் காண்கிறோம். காதல் அழகின் சிறப்பைக் காண்கிறோம். கற்பின் மாண்பைக் காண்கிறோம்.

ஆனால் இவையெல்லாம் தலை நிமிர்ந்து ஆடி இன்பூட்டுவதற்கு முன் தலைதூக்க ஒட்டாது தவிர்த்தது ஒன்று. அதுதான் விதி. இது அகல்யா—கௌதமரின் சுவர்க்க

வாழ்க்கையை ஒரு கணத்தில் நரக வாழ்க்கையாக்கி விட்டது. அமுத வாழ்க்கையை நஞ்சாக்கி விட்டது. இருவரும் பிரிந்தார். இருவரும் தனி வாழ்ந்தார். உயிரை வாட்டும் கவலை இருவரையும் பிடித்தது. உயிரையும் விடத் துணிந்தாள் அகல்யா. ஆனல் அவள்பழி வீண்பழி. பார்த்தா பார்த்தது பொய். அதை நாயகனுக்கும் உலகிற்கும் காட்டவே உயிரைப் பற்றி வந்தாள். நாயகனும் கண்டான் அவள் தூய்மையை, காதலை, கற்பை. மீண்டும் சுவர்க்கமடைந்தார் கௌதமர். மீண்டும் சுவர்க்கமடைந்தாள் அகல்யா. மீண்டும் சுவர்க்கமடைந்தனர் காதலர்கள்.

இக்கதை ஒரு கவிஞனின் இன்ப துன்பம் உலக வாழ்க்கையில் ஊடுருவிச் செல்லும் சுக துக்கத்தையே எடுத்துக் காட்டுகின்றது. வாழ்க்கை இன்பம் என்றோர் நிலை, வாழ்க்கையே வேதனை என்ற நிலைக்கு மாறுகின்றது. பாபமொன்று மறியாப் பெண் பழிக்கு ஆளாகின்ருள். எவ்வளவு தான் ஒரு பெண்ணை உயிரென மதித்தாலும் அவள் பிறனெருவனைப் பிரியப்பட்டாள் என்று உணரும் போது மனம் அவளையும் வெறுத்து, உலகையும் வெறுத்து தன்னையும் வெறுத்து என்ன பாடுபடும் என்பதைத் தான் இக்கதை நமக்கு நன்கு எடுத்துக் காட்டுகின்றது. ஆனல் பொய் என்றும் நிலைக்காது. உண்மைக்கு அழிவில்லை. இதுவே கதையில் கண்ட முடிவு.

பழங்கதையில் கண்ட அகல்யா பலவிதமாகத் தோன்றுகிருள்: பலர் பலவிதமாக அவளைத் தீட்டி இருக்கின்ருர்கள். அவள் மனக்குற்றம் புரியாவிடினும், வலையில் அகப்பட்டுக்கொண்ட மானைப்போன்று அவள் நிலை, இந்திரனின் காமவேட்கை தணியும் படிக்குத் தன்னைக்காவா நிலைக்குக் கொண்டுவந்து வைத்தது. இதையே நாம் பலர் காட்டும் அகல்யாவிடம் காண்கின்றோம். அகல்யா ஒரு குற்றமும் புரியாத ஒப்பற்ற கற்பின் தெய்வம் என்பதைக் காட்டவும் கதையைத் திருத்தி அமைக்கலாம். அவள் உடலும்

தூய்மையே அவள் உள்ளத்தைப் போன்று என்பதையும் காட்டிவிடலாம். அதுவே நான் செய்துள்ளது. கற்புடைய கண்மணி பழியைத் தடுத்தாள், கற்பைக் காத்தாள் என் பதே இக்கதையின் சாரம். சிறிது நேரத்தில் சொற்பக் கணங்களில் இந்திரன் இழைக்க நினைத்த தீது நடைபெற முடியவில்லை. அவளைக் கட்டாயப்படுத்திக் கூட அவன் இச்சையைப் பூர்த்தி செய்துகொள்ள நேரமில்லை, அவள் கணவர் கையிட்ட தீபம் அவன் அவள் போராடும் கரத் தைப் பிடித்திருந்ததையும் விடச்செய்தது. அவன் அவள் கரத்தைப் பற்றினதைத் தவிர இருட்டில் ஒன்றும் நேர வில்லை. நேர அவகாசமுமில்லை. நேர அகல்யாவும் விட்டிருக்கமாட்டாள், விட்டிருந்தால் உயிரைத்தான் விட் டிருப்பாள்.

நேரில் காண்பதெல்லாம் உண்மையல்ல என்பதையும் இக்கதை நன்குகத் துலக்குகின்றது. சிற்சில சமயங்களில் வாழ்க்கையில் சந்தர்ப்பங்கள் ஒன்றுமில்லாததை உருவாக் கிக் காண்பிப்பதை இக்கதையில் காண்கின்றேம். ஒரு பாபமும் அறியாப் பெண்ணும் பழிக்கு ஆளாவதைக் காண விதியின் விசித்திரமான விளையாட்டு நமக்கு நன்குகப் புலனுகின்றது.

பூர்வீக கதையில் உண்மைக்குப் பொருந்தாத நிகழ்ச்சி கள் சில உண்டு. அகல்யா கல்லாகச் சபிக்கப்படுதல், கல் ராமன் பாதம்படப் பெண் உருவடைதல், இந்திரன் சேவ லுருக்கொண்டு கூவி உட்புகுந்து பூனை வடிவில் வெளியில் பயந்தோடல், அவன் உடம்பெல்லாம் ஆயிரம் கண் களாக மாறி அவதியுறுதல்—இவையெல்லாம் நடக்க முடியாதன என்பதை யாரும் மறுக்கமுடியாது. இவை யெல்லாம் பார்க்கப் பார்க்கப் படிப்பது கதையென்பது தான் நமது மனதில் வேரூன்றும் ; இக்கதை, உணர்ச்சி எழுப்பக் கூடிய உண்மையான வாழ்க்கைச் சித்திரம் என்பதை நாம் நம்ப முடியாது. நம்புவதற்கு இந்த உண்மைக்குப்

பொருந்தாத நிகழ்ச்சிகள் இடங்கொடா. ஆனால் இத் தகைய நிகழ்ச்சிகள் நடந்திருக்க முடியாது என்பது உறுதி யானாலும், இவைகளில் சில தத்துவங்கள், உண்மைகள் பொதிந்திருக்கின்றன என்பது மட்டும் உறுதியாகின்றது. பாலைக்குடித்துச் செல்லும் கள்ளப்பூனை பதுங்கிப் பதுங்கி ஓடுவது போன்று இந்திரன் கௌதமரைக் கண்டவுடன் பயந்து நடுநடுங்கி ஓடி இருப்பன். அகல்யா கல்லானாள் என்றால், அவளைக் கௌதமன் பாபி என்று முடிவு கட்டிய பின் அவளை அவர் ஒரு கல்லாகவே மதித்திருப்பர். அவருடைய காதல் மறைந்திருக்கும். இப்படியே இந்திரன் உடல் ஆயிரம் கண்களாக மாறியது என்றால், அவன் இழைத்த தீங்கு உலகத்தையே அவனுக்கு எதிரியாகத் திரட்டியிருக்கும். ஒருவனுக்கு ஓரிரண்டு பேரே விரோதி யானால் அவர்கள் எங்கிருப்பாரோ, என்ன செய்வாரோ என்று அங்குமிங்கும் மோதி ஏங்கித்தவிக்கும் இரு கண்கள். அவனை உலகமே விரட்டி அடித்துப் பழிக்குப்பழி வாங்க முந்துமேயாகில், அவனைப் பாதுகாத்துக்கொள்ள இரண்டு கண்கள் இருந்தால் போதாது. ஆயிரம் கண்கள் வேண் டும். அப்போதுதான் அகிலமனைத்தும் ஒன்று திரண்ட தால், பகைவர் இங்கு இருப்பாரோ, அங்கு இருப்பாரோ என்று ஏங்கித் தவிக்கச் செய்யும். இங்கு ஆயிரம் கண் உண்டாயின என்பது இந்திரனுடைய திகிலையும் பயத்தை யும் காண்பிக்கிறதே தவிர அவன் உரு ஆயிரம் கண்ணாகி விட்டது என்பது அர்த்தத்தை அநர்த்தம் செய்வதாகும். அதே போல் தான் ராமர் பாதம் பட்டவுடன் கல் பெண் உரு பெற்றதென்றால், ராமன் பாதத்தில் நீயே துணை என்று அகல்யா வீழ்ந்திருக்க வேண்டும். அவர் அவள் வாயிலாக உள்ளதை அறிந்து அபயமளித்து அவள் கவலையை நீக்கி இருத்தல் வேண்டும். இவை தான் உலக நடப்புக்கும் உண்மைக்கும் ஒத்திருக்க முடியும். இப்படி அர்த்தப் படுத்துவதனால் பூர்வ கதைக்கும் ஒரு தீங்கும் நாம் இழைக்கவில்லை. அதனால் அகல்யா அதிரூபவதியாக விளங்குவதுடன் கற்பிற்கரசியாகவும் திகழ்கின்றாள்.

இங்கு வரும் கௌதமர் ஓர் கலைஞன், உயிர்க்காதலன் தேறிய ஒழுக்கமும் சீரிய குணங்களும் கொண்ட அறிவாளி. அழகைக் கண்டு அகங் குளிர்பவன். சொல் லால் சுவைமிக்க கவிதைச் சிற்பம் படைக்கும் ஆற்ற லுடையவன். இத்தகைய சுந்தரத் தலைவனுக்கு அகல்யா தலைவியாக அமைந்தது விந்தையல்ல. அவன் மனைவியை வெறுத்துச் சென்றது அவன் குற்றமல்ல. விதி செய்த சதி. கண்கள் கண்டதை ஆராய்ந்து பாராமலே உண்மையெனக் கொண்டான். சந்தர்ப்பங்களும் இல்லாததை உருவாக்கிக் காண்பித்தன. அவனும் மனிதன் தானே. மனிதன் நம்ப வேண்டியவற்றை நம்பித்தானே ஆகவேண்டும்

அகல்யா ஒரு பேரழகி, கலைவாணி. கண்டதும் காதல் கொண்டாள் கௌதமர் மீது, அவர் அழகைக் கண்டும், கவிதா சக்தியை உணர்ந்தும். கொண்ட காதலைக் கடைசி வரையிலும் போற்றி வந்தாள். கற்பின் சிகரமாக உயர்ந் தாள். அவள் பிழையற்றவள். விதிதான் அவளுக்குப் பிழை இழைக்கத் துணிந்தது, இந்திரனைப் போல்.

இந்திரன் செல்வமும், செல்வாக்கும் மிகுந்த காளை. இவைகளைக் கொண்டே அகல்யாவை அடைய முயல் கிறான், அகல்யா திருமணத்திற்கு முன்பும், பின்பும். ஆனால் அவன் அடைந்தது தோல்வியே.

இயற்கை இன்பம், களிப்பு, காதலில் ஆரம்பித்த கதை திடீரென்று பிரிவுத் துயரிலும், சந்தேகப் புயலிலும் தலை வனையும் தலைவியையும் நடுவில் தவிக்கவிடுகின்றது. பூஞ் சோலையில் இளந்தென்றலில் கூடிக்குலவிய காதலர்கள் பாழும் பாலையில் அடிச்சுவடின்றித் தனித்து அனலில் துடிக்கக் காண்கிறோம். கௌதமருக்கு உண்மை விளங்க, சுவர்க்கத்தையே அடைகின்றனர் காதலர்கள். வெந்து வாடிய காதல் உள்ளங்கள் கற்பின் நேர்மையால் இன்பக் குளிர்ச்சியைக் காண்கின்றன.

'அதரங்கள் தழுவத் தழுவ
அகமுமே தழுவத் தழுவ'

அவர்கள் உலகம் உணர்ந்தாரில்லை. இராமனும் முனிவரும் அருகில் இருப்பதைக்கூட உணர்ந்தாரில்லை. காரணம் அவர்கள் சுவர்க்க இன்பத்தில் திளைத்திருந்ததே. வாழ்க காதலர்கள்.

கலைவாணி எனும் நாடகத்தைத் தமது இரண்டாவது மலராக வெளியிட்ட வண்டமிழ் நிலையத்தார், அகல்யாவையும் வெளியிட மனமுவந்து ஏற்றுக் கொண்டதற்கு அவர்கட்கு என் மனமரர்ந்த நன்றி. எனது அருமை நண்பர், சாகித்ய கர்த்தா, கலைஞர் திரு. **N. S.** சிதம்பரம் அவர்கள் இந்த வேலையில் எனக்கு உற்சாகத்தையும் இன்பத்தையும் ஊட்டினார்கள். எனது அருமை நண்பர், அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ் ஆராய்ச்சித்துறைப் பேராசிரியர் வித்வான் திரு. G. சுப்பிரமணிய பிள்ளை **M. A. B. L.,** அவர்கள் அகல்யாவைக் கண்ணுற்று அணிந்துரை வழங்கினார்கள். அன்பர்கள் இருவருக்கும் என் நன்றியும் அன்பும் உரித்தாகுக. வணக்கம்.

T. D. மீனுட்சிசுந்தரம்.

காணிக்கை.

தேனுக்கு முண்டோ தீஞ்சுவையும் என்பார் போல்
தேமதுரத் தமிழில் இசையுண்டோ என வாதம்
வீணர் புரிய, தமிழ் ஆர்வப் பணிபுரிந்த
வணிகர் குல விளக்கு, தமிழ் நாட்டின் தனித் தலைவர்,
கானத் தமிழ்ப்பண்ணை ஆராய்ந்த கலை வள்ளல்
கோலத் தமிழ் அன்னை கொஞ்சுகின்ற **சண்முகனார்**
வானத் தரசாகி மறைந்திடினும் அவர் அன்பை
வாழ்த்தி வணங்குகின்றோம், அன்பெங்கும் வாழியவே.

T. D. மீனாட்சிசுந்தரம்.

அகல்யா

[library stamp]

தோட்டத்தில் அகல்யா ஒரு நாள்

1. கமலங்கள் நகை கண்டாள்
   கனிவகைகள் பல கண்டாள்
   குவலயமே பொன் பரப்பில்
   காவியமே போல் கண்டாள்
   மயிலினங்கள் ஆடுவதும்
   மானினங்கள் ஓடுவதும்
   குயிலினங்கள் பாடுவதும்
   குலவுவதும் கண்டாள்.

2. சகிகளுமே சுற்றி நிற்க
   சம்பங்கி வாசம் வீச
   சுகிப்பதற்குத் தென்றல் வீச
   சந்தப்பண் இனிமை வீச
   இன்பமாம் மதுவை உண்டு
   கிறுகிறுத்த சிந்தை யொடு
   சுந்தரி சுவைத்து நின்றாள்
   சோலையின் எழில் வனப்பை.

3. கண்டவை கண்டு மீண்டும்
   கருவண்டு பூவைச் சுற்றும்
   தன்மைபோல் சோலை சுற்றி
   அகலியா ஆடி நின்றாள்
   புனலிலே கையை வீசி
   பொற்கொடி நீரைத் தூவி
   அணங்குகள் மீது வீசி
   ஆர்ப்பரித் தாடிச் சென்றாள்.

4. பாங்கியர் ஓடுகின்றார்
பக்கத்திற் கொருவராக
ஓங்கிய விளையாட்டின்பம்
ஒட்டமாய் ஓடுதம்மா
பாங்கியர் ஓடப் பின்னே
பிணைத்த கைக்குழியில் தண்ணீர்
தாங்கியே அரசி ஓடும்
தாக்கவே பாங்கிமாரை.

5. கைகளைக் கொட்டித் தட்டக்
கன்னியர் வளையல் கீதம்
செய்திட வண்ணப் பூச்சி
பறப்பதைப் போல எழிலும்
இன்பமும் தாங்கி ஓடும்
இளமயில் கூட்ட மெல்லாம்
பந்தென உருண்டு சென்று
பதுங்கினர் மருங்கு தன்னில்.

6. நெருங்கிய சோலை யாங்கே
நாற்புறம் சுற்றி நோக்கிப்
பதுங்கிய பாங்கிமாரைப்
பிடிக்கவே அரசி வந்தாள்
வந்தது விளையாட்டிற்கே
வேதனை அணைப்பிற் கில்லை
பறந்தது விளையாட்டின்பம்
பார்க்கவே அமர நாதன்.

அமரநாதன்

7. அகலியா, ஆரணங்கே
அன்பிற்கா மருளுகின்றாய்
புகலிடம் நீதானன்றோ
பெற்றுக் கொள் என்றனன்பை

அதிமதுரத் தேனிதழால்
ஆலிங்கனம் புரியும்
சகிமார்கள் மூவுலகில்
உன்னழகிற் கீடோர் சொல்.

8. சோலையைக் கண்டேன் உன்னில்
சுகமதே உருவாய்க் கண்டேன்
காலையில் மலரும் வண்ணத்
தாமரை முகத்தில் கண்டேன்
முல்லைகள் அடுக்கிவைத்த
முத்தெனப் பற்கள் கண்டேன்
அல்லிகள் மலர்ந்து சொரியும்
பால்மதி வதனம் கண்டேன்.

9. கனிகளின் மினு மினுப்பும்
கன்னத்தின் திரளில் கண்டேன்
தளிர்களின் செழு செழுப்பும்
திருமேனி தனிலே கண்டேன்
சோலை நீ ஆனதாலே
சுகித்திட ஆசை கொண்டேன்
சோலையுள் காற்றாய்ப் பாய்வேன்
சரிசொல் நீ இன்பம் காண்போம்.

10. காலையில் பூத்து நிற்கும்
களிமது சுரந்த ரோஜா!
வேளையும் சரிதா னென்று
வண்டு போல் வந்துவிட்டேன்
மொட்டவிழ, செம்மை காண
மோகன முறுவல் காண
இட்டம் கொண்டேன் உன்மேல்
இனிமை மது உவந்தளிப்பாய்.

11. வேகம் தணியுமட்டும்
வாளா யிருந்தாள் பெண்

தாபம் எனும் சுரத்தைத்
தணிவிக்க ஓர் மருந்தைத்
தேடுவது தன்னிடத்தில்
தூர்த்தன் மதியீனம்
வாளாயிருந்தவள் பின்
வாயசைக்க ஆளசைந்தான்.

அகல்யா

12. நண்பன் என நினைத்து
நேசத்துடனிருந்தேன்
அன்பை அறியாமல் நீ
ஆசை கொண்டாய் வீணே
ஒளியென நானிருந்தேன்
ஒளியெனவே மிளிர்வேன்
பழி என்மேல் கொண்டுவரப்
பாபச் சொல்லை உரைத்தாய்.

13. கொட்டுமழை போலே பேசி
கண்ணியம் நீ கெட்டாய் தேவா
தொட்டு எனைத் தாலிகட்டும்
துரைமன்னன் அவனுக்கன்றி
இவ்வுடலை, இம்மனதை
இவ்வுயிரை யார்க்கேனும்
இவ்வுலகில் அளிப்பதில்லை.
சத்தியமே யான் சொன்னேன்.

14. கதிரவன் நானிருக்க
ஒதுங்கிய மேகம் நீயாய்
களிப்புடன் நேசமாடக்
கபடமற்றே இருந்தேன்
முகிலுமே ஆடினாலும்
முற்றிலும் கிட்டினாலும்
அகிலமே அறியும் நன்றாய்
பரிதியை அணையா தென்றே

15. இந்திர லோகத்தின் தேவி
இக்கணம் இங்கிருந்தால்
இங்கிதமாய் நீ சொன்ன
ஈனச் சொல் கேட்டிருந்தால்
மெச்சுவள் மெத்த நின்னை!
மெச்சுவள் மெத்த நின்னை!
இச்சையா? என்ன சொன்னாய்?
அறிவையும் விற்றுயந்தோ!

16. வெட்கமே விட்டுப் போச்சே
உன்மதி கெட்டுப் போச்சே
தப்பிதம் துணியலாச்சே
தவறுதல் கேட்கலாச்சே
இந்திரன் என்றால் நானும்
ஏற்பனோ உன்னை வீண!
இன்றுனை மன்னித்தேன் யான்
இழிசெயல் ஒழிவாய் இன்றே.

17. நெருங்கிய சோலை தன்னில்
நெருங்கவே தோழிமார்கள்
சுருங்கிய முகத்தினோடும்
குழம்பிய மனத்தினோடும்
விழுங்கிய வார்த்தை யோடும்
வதங்கிய உணர்ச்சியோடும்
பதுங்கியே நின்று நின்று
பறந்தனன் பாழ்மனத்தான்.

II

வனத்திலே அகல்யா ஒரு நாள்

18. செங்கதிரோன் இளநகையில்
சொக்கி மகிழ் மாமலர்கள்
இங்கதிகம் வாய்த்திட்ட
இங்கிதம் தான் என்னேயோ

என்றுரைத்த பெண்மணியை
இனிமையிலே தனிவிட்டுச்
சென்றனரே தோழியர்கள்
சேம இளைப்பாறிடவே.

19. கண்கள் விருந்துண்ணும்
காட்சிதனையே கண்டு
பெண்ணிவளும் சாய்ந்திட்டாள்
பாங்கான தன் நிழலில்
தன்னிகரு மில்லாத
தனியழகி, தென்றலிலே
தன்னைக்கித் தேடிவரும்
துணியேடு கண்டிட்டாள்.

20. அங்கிங்கும் ஓடி அவள்
அங்கமதில் சாய்ந்தடைந்த
சுந்தரச் சுவடியிலே
சாய்ந்ததவள் தன் கவனம்
அங்கம் புளகித்தாள்
ஆர்வமெல்லாம் ஓங்கப்
பொங்கியே பூரித்துப்
பலமுறையும் பார்த்துவந்தாள்..

21. "அழகுக்கு அடிமையென
அணைப்பதற் கழகு
முழுநிலவில் மதுமலரில்
மாந்தளிரில் கனியில்
எழுந்தருளி என்மனதில்
இன்பமதை யருளும்
முழு அழகும் கண்டேனே
மற்றும் வேறுண்டோ

22. காதல் கதை கேட்டேன்
கற்பனைகள் செய்தேன்

காதல் கனுக்கண்டேன்
    காதல் மிக வானேன்
காதல் கனை சொட்டும்
    கன்னியர் மீதல்ல
காதல் தமிழ் நாரில்
    கவிதை மலர் தொடுக்க.''

23. என்றவரிகள் கண்டாள்
    யாரிவனோ என்றாள்
அன்றவனைக் கண்ணாரக்
    காணவுற வேண்டும்
என்பது போல் அவள் விழிகள்
    அங்கு மிங்கும் ஆயும்
அங்கவனும் வந்திட்டான்
    அவள் எழுந்தாள், ஆறா!

24. ஒப்பில்லா வடி வழகு
    உயர் வழகு அழகே
இப்புவனம் கண்டிரா
    எழில் ராணி ராஜன்
உத்தம நோக்கினில்
    உள்ளங்கள் ஒன்றினர்
மற்றுமே வேறுண்டோ
    முழு அழகும் கண்டார்.

25. முழுநிலவில் மங்கையிவள்
    மலர்ச்சி முழுதில்லை
மதுமலரில் மாதிவளின்
    மணம் முற்று மில்லை
மாந்தளிரில் இவளினிமை
    மெருகு முழுதில்லை
தீங்கனியில் இவராரும்
    தீஞ்சுவையும் உண்டோ.

26. அள்ளிப் பருகுகின்றான்
ஆரணங்கின் அழகை
உள்ளம் நிறையுதம்மா
விம்முதம்மா மனமும்
கன்னி மலர் நோக்கில்
கவிமயங்கிக் காதல்
இன்ப விருந்தழைப்பை
இமை மூடாதுண்டான்.

27. தன்னந் தனியான
தன்நிழலில் அழகில்
வண்ண வடிவின்ப
உத்தமனைக் கண்டாள்
எண்ணம் பல கொண்டாள்
என்னரசன் என்றே
கன்னம் களி சொல்லும்
காதல் விழி சொல்லும்.

28. இனிமை இளந் தென்றல்
எழில் ததும்பும் சோலையிலே
தனிமை இரு பாலர்
தம்மிதயம் ஒன்றிப்
புதுமை என்றுமிலா
பெருஞ்சுகத்துள் மெய் மறந்தார்
அருமை அருமையிதே
அன்பான இன்பமிதே.

29. இருவர் இமை சொக்கும்
இளநகையும் அரும்பும்
உருவம் உவப் பெய்தி
உள்ள மென விரியும்
பருவம் படைத்தருளும்
பெண்மை மணம் வீசும்

திருவில் திளைத் திட்டார்
தேன் சுவைக் கலானுர்.

30. கண்கள் கலந்தனவே
காதல் சுரந்தனவே
இன்னும் இது போல
மௌன முமேன் கேட்டிட்டான்
பெண்மணி நீர் யாரோ
புண்ணியனின் தீஞ் சொல்லும்
கண்கள் கலந்துவக்கும்
கன்னி செவிசாரும்.

31. 'பெண்மணி நீர் யாரோ'
புகழ் வார்த்தை கேட்டாள்
அன்பன் அவனிதயம்
முழு நிறையும் கவரும்
கன்னி அவன் சொந்தக்
கண்மணியே யன்ருே
பெண்கள் குலத்திற்கோர்
பேரரசி யன்ருே

32. எங்கள் வள நாட்டின்
எழில் ராணி கண்டீர்
தங்கள் திருவூரும்
திருப்பேரும் யாதோ
என்றே உரை செய்து
எதிர்பாரா விதமாய்
நங்கை ஒருதாதி
நேராகி நவின்ருள்

33. உள்ளம் பறிகொடுத்த
உத்தமனும் ஒன்றும்
கள்ளம் கபடின்றிக்
காதலுரை செப்ப

உள்ளமதே யானும்
உரையின்றி நின்றான்
உள்ளங்கள் பேசினதால்
வாய்க்கிடமே இல்லை.

கௌதமன் - அகல்யா காதல் வாழ்க்கை.

34. கௌதமன் கணவன் ஆனன்
காதலி அகல்யாவானள்
கற்பெனும் ஆரம்பூண்டாள்
கணவனை உயிராய்க் கொண்டாள்
பற்றியே நாதன் கொம்பைப்
பைங்கொடி பேரானந்தம்
உற்றனள், உவகை கொண்டாள்
வாழ்க்கையே இன்பச் சோலை.

35. கொழுநனைத் தெய்வம் என்று
கொண்டனள் காதல் தெய்வம்
அழுக்கிலாமனது கொண்ட
அன்பனின் செய்கை யெல்லாம்
பிறர்மனம் நோகா வண்ணம்
பெருமையே பெருக்கி ஓங்கும்
அறம் வளர் கைகள் அவனை
அனுதினம் அணைந்து மகிழும்.

36. இருவரும் இணைந்த வாழ்வில்
இல்லையே சற்றும் துன்பம்
இருவரும் நோக்கும் போதும்
இருவரும் உணரும் போதும்
இருவரும் எண்ணும் போதும்
இருவரும் பேசும் போதும்
இருவரும் கூடும் போதும்
இருப்பது ஒன்றே ஆவி.

37. கனிகளில் ஊறும் இன்பம்
குழலினில் விம்மு மின்பம்
கவிகளில் தேங்கு மின்பம்
கனவினிலோடு மின்பம்
கருத்தினில் சாரும் இன்பம்
காட்சியின் இன்பம் யாவும்
இவரின்பப் பரிதி முன்னல்
அகல் விளக்காகி நிற்கும்.

38. இவர்களும் வாழுகின்றூர்
இனிய தோர் தனிக்குடிலில்
தளிர்களை வீசிநிற்கும்
தருக்கள் தண் நிழலைத் தாங்கும்
குளிரினைத் தூவிக் குடிலைக்
குழந்தை போல் தொட்டிலாட்டும்
செழிப்புடன் படரும் கொடிகள்
சுந்தரப் பசுமை மாட்டும்.

39. குடிலுரை செப்பு மென்றூல்
கூறுமே காதற் கதைகள்
குடிகளின் குணத்தினழகும்
குறைவிலா மனத்தினழகும்
பொன்னெனும் மேனியழகும்
பொற்புடை செயலினழகும்
சொல்லிலே சொல்லி வார்க்கச்
சக்திதான் படைக்கவில்லை.

கௌதமன்

40. "மனைவியென்றூலோ அவளும்
மனைக்கு நற்காவற் பெண்ணே
துணைவியன்றே வாழ்க்கைக்குத்
துணைவியே உடல் உயிர்க்கு

கட்டுண்டு அடிமையைப் போல்
அடுப்பூத மட்டு மல்ல
கண்ட கண்ட நேரத்தில்
காமம் தணிக்கவல்ல.

41. உடலுமே உயிரும் ஒன்றி
இரண்டறக் கலக்கும் போது
இடமுண்டோ வேறு மொன்றை
எண்ணி இனித்திருக்க
வாய்ச்சுவையும் கனிச் சுவையும்
வையத்தை ஆட்டிவைக்கும்
மெய்ச்சுவையும் காண வாங்கு
மொட்டவிழும் உயிர்ச்சுவையே

42. இடர்நெறி வாழ்மக்கள் குலம்
இன்பக் கலவி தன்னில்
உடற்கின்பம் காண்கின்றார்
உயிர்க்கின்பம் காண்கிலரே
காதல் அலைகளெல்லாம்
கோடிப் பெருக் கெனவே
ஓடி உயிர்க்கு இன்பம்
ஊட்டுவதும் அறிகிலரே

43. இல்லாள் எனக் கென்றும்
இன்பம் அளிக்கும் ஊற்று
சொல்லால் சுவை காட்டிச்
சோகம் தணிக்கும் குழல்
கையால் அமுதூட்டும்
கற்கண்டு, கற்பகமே
மெய்யால் முழுச் சுகமும்
மெத்தளிக்கும் முழு நிலவு

44. வையத்தை நான் வேண்டேன்
உயர் கோடிப் பொன் வேண்டேன்

பையை அளித்துப் புகழ்
பதிலுக்கு வாங்க வேண்டேன்
மாடமாளிகையும் வேண்டேன்
மற்றெந்த மேன்மை வேண்டேன்
கூடநீ இருக்க, கண்ணே
குடிலுமே சுவர்க்க மன்றோ

45. ஓடித்திரிந்து மக்கள்
ஒற்றுமையாக் கண்டார்கள்
கோடிக் கோடிக் கணக்கில்
குற்றத்தையே புரிவர்
ஆடி மகிழ் வதற்கும்
பாடிக் குளிர் வதற்கும்
கோடி கொடுப்பாரவர்
குற்றமட்டுமே யொழியார்.

46. குற்றம் குடி கொண்ட
குவலயத் தோர் செய்கை
சற்றும் பிடித்த மின்றிச்
சார்ந்தேன் இந்தக் குடிலை
ஜோதியாய் வீணையாய்
சுகம ளைத்தும் ஓருருவாய்
ஊதியம் காதல் ஒன்றாய்
வாழ்வினுக் குன்னைப் பெற்றேன்.

47. உண்டானல் இன்காதல்
வாழ்க்கைக் கிட முண்டு
கொண்ட நிறைக் காதல்
களங்க முறலாயின்
கண்காணத் தேசமது
கண்ணிமைக்கும் போதினிலே
விண்மீன் போற் பாய்ந்து
ஒதுங்குவது மேன்மையன்றோ.

48. காதலி, பாட்டி சைப்பாய்
கூவுவாய், குரலிசைப்பாய்
பாதத்தில் சதங்கை யிரட்டப்
பைங் கொடி ஆடு: இன்பம்
எங்குமே இறைப்பாய் யாழை
அணைத்திட விரல் குரலும்
பொங்குமே கானம், கண்ணே
பூலோகம் சுவர்க்கம் தானே.

49. அன்பையே அனுபவித்து
அகமதால் பாடும் குயிலே
உன்மடி மீது சாய்ந்தேன்
உள்ளமே வெறியில் சாய
கண்மணி, உந்தன் கானம்
காற்றெனும் இன்பம் தன்னில்
என்னையே தூக்கிச் செல்லும்
இத்தரை சுவர்க்கம் காட்டும்.

50. என்மனம் துடி துடிக்க
ஏக்கமும் அனலாய் வீச
உன்னையே சார்ந்து நிற்பேன்
உன்நிழல் குளிர் அணைப்பேன்
உன்னிடம் உளத்திலுள்ள
வெப்பெலாம் சொல்லி ஓய்வேன்
கண்மணி, இதழ் அளிப்பாய்
காதலி, அணைப்பாய் நன்றே.

51. உன் இதழ் பருகப்பருக
உனையணைந் தணைந்தே நிற்க
கண்மணி கவலை யெல்லாம்
காற்றெனப் பறந்து போச்சு
உடலினைக் கூதிர் காற்றும்
உலுக்கியே நின்ற போது

இடமுனைக் கண்டு நானும்
வெந்தழல் வீச்சுப் பெற்றேன்.

52. இடரெனும் பாலை தன்னில்
இனமெனும் வெந்தீ வாட்ட
அடர்ந்தலர் அருமைச் சோலை
அன்பே நீ எனக்கு மானாய்
வாழ்விலும் பொறுப்பாரில்லை
வாளென இனத்தவர்கள்
தாழ்விலும் ஏசித்தூற்றித்
தரையினிற் கவிழ்ப்பர் அந்தோ

53. அவர்களின் கூட்டம் விட்டேன்
அவதியை அன்றே விட்டேன்
பொருளெலாம் விட்டு வந்தேன்
பொற்குவை உன்னில் கண்டேன்
அழகெலாம் ஆகி நின்றாய்
அன்பெலாம் ஆகி நின்றாய்
அறிவெல்லாம் ஆகி நின்றாய்
அணைத்திட்டாய் அகமகிழ்ந்தேன்.

54. அழகெனும் கோயிலுள்ளே
அன்பெனும் கடவுள் கண்டேன்
மலர்விழி சபையினுள்ளே
மையலாம் தேவி கண்டேன்
மதிமுக வாசல் தன்னில்
மோகனம் வாழை கண்டேன்
புதுநகை மோதிரத்தில்
காதலாம் வைரம் கண்டேன்.

55. அழகுதான் எனது தெய்வம்
அழகுதான் எனது கோவில்
பழகும் நம் பொருள்களெல்லாம்
பலவித அழகுகாட்டும்

புள்ளிமான் அழகைப்பாராய்
பூக்களின் பூரிப்பைப்பார்
துள்ளியே முயல்கள் ஓடத்
தவழ்வ தோரழகுங் காணுய்.

56. மயில்களின் விரிப்பைப் பாராய்
மெல்லிய பசும்புல் பாராய்
துயிலும் ஓர் புனலைப் பாராய்
தண்மதி தன்னுள் பாராய்
வானெல்லாம் நீரில் தோன்றும்
வெண்ணிலா புனலில் தோன்றும்
மீனெலாம் புனலில் தோன்றும்
மகிழ்வுருய் அழகே, அன்பே,

57. விண்ணமுது பால் சொரியும்
வாடை மல்லிபால் சொரியும்
வண்ணப்பு ருக்க ளெல்லாம்
வளைந்தோடிப் பால் சொரியும்
நின்மேனி பால் சொரியும
நின்பற்கள் பால் சொரியும்
கண்ணைப் பறிகொடுத் தேன்
காதலி எனை அணைவாய்.

58. இதையெலாம் சொல்லிச் சொல்லி
இன்பத்தை ஊட்டு வித்த
கதையெலாம் சொல்லச் சொல்லக்
குடிலுக்கு வாய்தானில்லை
இதுமட்டுமல்ல இன்னும்
எவ்வளவோ கேட்டிருக்கும்
இதுமட்டுமல்ல இன்னும்
எவ்வளவோ கண்டிருக்கும்.

III

59. வனிதா மணி அகல்யா
வண்ணத் துகிலுடுத்துக்

கவிதா நயத்துடனோர்
கைவீசிச் செல்கின்றாள்
சின்னஞ் சிறு இடுப்பில்
சேர்ந்த ணைந்த பொற்குடமும்
அன்னம் அவள் கையில்
அழகாய் அமைந்திடவே.

50. பொட்டிட்ட ஓர் மானும்
பின்னாலும் முன்னாலும்
இட்டமுடன் கை வீச்சை
இடித்திடித் தோடிவரத்
தட்டிக் கொடுப்பாளவள்
தானும் சிறிது நின்று
கட்டிப் பிடித்து முத்தம்
கன்னத்திலே கொடுப்பாள்.

61. தாது நிரப்பி வைத்துத்
தேனைப் பெருக்கி நிற்கும்
போதுகள் கண் விரித்து
பெண்மணியைக் கண்டதுமே
துள்ளிக்குதித் தோடும்
துணைமான் தனைப் போன்றே
களிக்கூத்தும் ஆடிச்சாடி
கண்மணியைக் கைகுலுக்கும்

62. பொன் வண்டு நறும்பூவில்
போதை அருந்தி நிற்க
கண்களும் சொக்கி மூடக்
களிக்கனாக் காணும் சற்று
தூக்கமும் மலரும் விட்டுத்
தையலின் வதனம் கண்டால்
ஏக்கமே கொண்டு எண்ணும்
'எவன் இவள் ஆசைவண்டோ.'

63. பந்தியாய்க் கூடி ஆடிப்
பற்றிடும் கிளைகள் தாவும்
மந்தியும் அழகைக் காண
மட்டற்ற மகிழ்ச்சி கொள்ளும்
குழந்தைபோல் அவளைச் சுற்றி
கூத்துகள் ஆடும், ஓடும்
அழகியும் அதனைக் கண்டு
ஆனந்தம் எய்து கின்றாள்

64. கீச்செனப் பேச்சைக் கொட்டும்
கிள்ளைகள் பேச்சை விட்டுப்
பளிச்செனச் செல்லும் அழகை
பார்த்திடப் பேசிக் கொள்ளும்
'எம்மையே அவள் அழைத்து
தேனிதழ் தனிலே எங்கள்
செம்மைவாய் வைத்து விட்டால்
போதுமே உலக வாழ்க்கை'

65. தோகையை விரிக்க எண்ணி
முகிலினம் வரவு பார்க்கும்
ஓகைசேர் மயிலினங்கள்
ஒளிர்மணி வல்லி போலும்
பாவையைக் கண்டு வந்து
பொழிலொடு மாடும் பின்னர்
ஆவியும் குன்றி வெட்கி
அவள் எழில்கண்டு நாணும்.

66. விண்ணிலே ஓடும் புட்கள்
'அழகொளி மண்ணில் கண்டோம்
அம்மயில் யாரோ' என்ன
அவளையே வட்ட மிட்டு
அரும்பிய முல்லை போன்ற
வாயினில் ஆசை ஊற

விரும்பிய கண்கள் கொண்டு
நுகருமே அவளின் அழகை.

67. 'அழகொளி மண்ணில் கண்டோம்
என்பதைக் கேட்ட ருக்கன்
உளமதை ஆவல் பொங்க
ஊன்றிய கவனத்தோடு
பொன்கொடி இவளைக் காணப்
படர்ந்திடும் கிளை இலைகள்
பொந்துகள் சந்தின்வழியாய்ப்
பொருத்தினன் விழிகளெல்லாம்.

68. விந்தை விந்தை யெனவே
விண்புட்கள் சப்திக்கப்
பந்தி பந்தியாய் மான்கள்
பார்த்துப் பறந்தோட
அன்பெல்லாம் ஆகி நின்ற
அகத்துள்ளே அவள் கணவன்
இன்பக் கொலு விருந்து
வீற்றிருக்கத் தான் கண்டாள்.

69. செந்தாமரைக் குளமும்
சீக்கிரமே தானடைந்தாள்
நந்தாவிளக்கு நவ
நாயகன் தன் நற்செல்வம்
சிங்காரப் பூக்களெல்லாம்
செம்மைப் பொலிவு காட்ட
சிங்காரி புனலினுள்ளே
ஜோதியையே காட்டினள்.

70. வானத்தின் வீதியிலே
வெண்மதிதான் என்று
மோனத் துயில் கலைத்த
மெல்லியலாள் அன்னம்

கானம் குழல் பெருக்க
கமகம் கமழ் வான்போன்று
ஸ்நானம் புரியப்புனல்
சோலை விளங்கியது.

71. கண்டான் வடிவழகைக்
கனகக் கனித்திரளை
உண்டான் உளமார
ஸ்வர்ண மய அழகை
மாது ளையைப் பிரித்து
மாணிக்கம் கண்டது போல்
பாவைப் பளிங் கிவளைப்
பார்த்தான் பறி கொடுத்தான்!

72. காமப் பெருக் கெடுத்துப்
பொருமும் அவன் விழிகள்
காமப் பெருஞ் சுரநோய்
கௌவும் அவன் மனதை
காமம் தலைக் கேறக்
கிறு கிறுத்தான் தேவேந்திரன்
காமம் அவள் அணைப்பைக்
கொண்டணைக்கத் தேர்ந்தான்.

73. புனலிலே ஆடி விட்டுப்
புகுந்துளே நீந்தி விட்டுப்
புனலினைக் கூந்தல் விட்டுப்
பிரித்துமே கோதி விட்டுப்
புனலினைப் பொற் குடத்தில்
புகுத்தியே இடுப்பிலிட்டுட்
புனலினை விட்டுப் பொன்மான்
புனல் துகிலோடு வாராள்

74. கதிரவன் சாய்ந் தானங்கே
கம்மிய வெளிச் சமெல்லாம்

பதியவர் தன்னைத் தேடி
வருகலாம் என்றுணர்ந்து
மனமெலாம் அவர்பால் செல்ல
மகிழ் வெலாம் எய்தலுற்றாள்
கணமதில் மருங்கினின்றும்
கள்வனும் குதித்து வந்தான்.

75. கையில் பூ ஒன்றேந்தி
'கண்மணி கூந்தற் கென்றே
கொய்துநான் வந்தேன் சூடு'
என்றதும் கற்பிற் கரசி
பிடுங்கிப் பூக்காலிலிட்டு
பொற்கொடி துடித்து நின்றாள்
நடுங்கிட சோலை யெல்லாம்
நகைத்தனன் அந்தோ பெண்ணே.'

76. சொல்லெழுப்ப நா எழாது
தொண்டை அடைக்குதையோ
கெஞ்சுதற்கு மனம் விடாது
கூசுதையோ நெஞ்சும்
ஐயோநான் என்ன செய்வேன்
என்றிளைத்து மங்கை
கையொடித்துக் கண்ணீர்
கண் பொடித்து நின்றாள்.

இந்திரன்

77. "கட்டிக் கரும்பினளே
காம முற்றேன் இன்றல்ல
தொட்டு நான் கைபிடிக்க
தேர்ந்தது தான் இன்றைக்கு
சொக்கத் தங்கம் போன்ற
செம்மேனி இன்று கண்டேன்

அக்கம் பக்கம் யாருமில்லை
அணைத்திடலாம் வா வா.

78. கொண்ட கணவன் உனைக்
கண்டிடுவான் என்ற பயமா
அண்டம் அறிந்தால் இது
பாபமென்று அழுகின்றாய்
கண்டநம் இன் சுகத்தைக்
கண்டவர் நாமே யன்றி
அண்டமும் அறியலுறுமோ
அவனும் தான் அறிவானோ.

79. சுந்தரி, இனிமை சொட்டும்
சுவைமிகு திராட்சக் கனியே
இன்பமாம் நான் உன் காதல்
இனிமைசேர் தேனையுண்டு
சிந்தையென் சோர்வை நீக்கச்
சீக்கிரம் தயை நீ செய்வாய்
சங்கையேன் சரசமாட
சீக்கிரம் வாராய் சோர்வேன்?

80. பொங்கிடும் அழகை உன்றன்
பொன் மயமேனி தன்னில்
திங்களுள் தோய்ந்த பால்போல்
திரட்டிய பிரமன் உன்றன்
அங்கத்தில் அழகை வைத்தான்
அதரங்கள் பவளம் வைத்தான்
கொங்கையுள் கவர்ச்சி ஓங்கும்
காந்தத்தை வைத்தான் ஆஹா.

81. விந்தையே உன்றன் காட்சி
விந்தையே உன்றன் காட்சி
சிந்தையே பறிகொடுத்தேன்
சீக்கிரம் சரிநீ சொல்வாய்

இங்கிதம் வழிந்தோடும் நின்
விழிகளால் காதல் காட்டி
இங்கென்னை அணைப் பாயாகில்
இக்கணம் அடிமை யாவேன்.

82. இந்திரன் வேண்டு கின்ருன்
இல்லை என்றிகழாதே நீ
முந்தியே கண்டிராத
மோகன வாழ்க்கை யெல்லாம்
முற்றிலும் உணர்த்தி உன்பால்
மோகமே புரிய வந்தேன்
பற்றெனை பதட்ட மென்ன
பார்வையில் கனலு மென்ன."

83. கேட்டாள் கொடுஞ் சொற்கள்
நெஞ்சம் படபடத்தாள்
ஆட்டமுறும் பம்பரம் போல்
அச்சமெல்லாம் விட்டுத்
துடிதுடித்து வார்த்தை வீசித்
துன்மார்க்கனைப் பழித்தாள்
இடித்திடித்துக் காட்டினும்
அசை வானே ஈனன்.

அகல்யா

84. "தாசிநான் இல்லையடா
தப்பெண்ணம் கொள்ளாதே
வேசி என மதித்து
விளையாட்டா புரிகின்ருய்
தூசி நீஎனக் காவாய்
துன்மார்க்க என் காலில்
போது நசுங்கின போல்
புன்மதி நசுக்கிடுவாய்

85. ஒதுங்கென்று சொல்கின்றேன்
ஓதுகின்ருய் வேதம்
ஒதுங்குவையா மாட்டாயா
வெறியனே வீணனே
பதங் கெட்ட பதருனய்
பாவியே, போய் விடுவாய்
இதங்கெட்டுப் போகவா நீ
என்னை மறிக்கின்ருய்.

86. 'அதோ வருகின்ருர்
என் கணவர் என்ஈசர்'
இதைத் கேட்ட மாத்திரத்தில்
இந்திரனும் மாயமதாய்
மறைந்த விந்தை என்னே
மணாளர் வருகின்ருர்
மறைப்பது தான் நன்ருே
முற்றும் உரைத்தல் நன்ருே.

87. கொண்டவரும் இக் குறைகள்
காணவில்லை போலும்
கண்டகண்ட வார்த்தை யெலாம்
கேட்க வில்லை போலும்
சும்மா இருக்கின்ருர்
சூழ்ச்சியிதை யான் சொன்னல்
அம்மா, அவர்க்குத் துயர்
ஆருய்ப் பெருகு மன்ருே.

88. இருந்தாலும் இதை யெல்லாம்
என் கணவர் காதிற்கு
தருணம் சரி பார்த்து
தக்கபடியே உரைப்பேன்
ஐயோ, இதைச் சொன்னல்
ஐயனுக்கு ஆபத்தோ

வெய்யோனை மாறி விட்டால்
விபரீதம் விளையாதோ.

IV

89. நிலவொளி வீச்சில் வஸந்த
மண்டபம் கூடமெல்லாம்
அழகொளி வீசி நிற்கும்
அற்புத மாட மெல்லாம்
நிழலினைத் தூவி நிற்கும்
நிசப்தமே நிலவும் எங்கும்
சுழலெனும் காம வெறியில்
சுழலுவான் உம்பர் கோனும்

90. மஞ்சமும் வெப்பம் ஊட்டும்
மணமெலாம் வேட்கை வீசும்
பஞ்சணை மெத்தை யெல்லாம்
பற்றிடக் காமம் படரும்
சந்திரன் தூபம் போடும்
விரகமே பொங்கி ஓங்கும்
துஞ்சவும் மனமும் இல்லை
தாபத்தைத் தணிவிப்பாளோ

இந்திரன்

91. அவளை நான் மறப்பதற்கு
வழியுமே காணவில்லை
கவலையே என்னைப்பற்றிக்
கனலதாய் வாட்டுதன்றோ
திவலை போல் என்றனுள்ளே
காமமும் கொட்டுதை யோ
அபலைபோல் அலைவதற்கோ
அவளை நான் இன்று கண்டேன்.

92. அவளை நான் ஆசைகாட்டி
அடைவது முடவன் ஆசை
அவளை நான் அடைவதென்றால்
அடைவது திண்ணம் தோல்வி
அவளை நான் கெஞ்சிக் கேட்டும்
அலட்சியம் செய்தாள் என்னை
அவளை நான் வஞ்சம் தீர்ப்பேன்
அவளை நான் ஆள்வேன், ஆணை"

93. இரவினைக் கழிப்பதற்கு
இன்பகா வியங்களுண்டு
கரும்பெனச் சுவையை ஊட்டும்
களிப்பொருள் பானமுண்டு
உச்சியைத் தொட்டு வீழும்
உயர்ந்ததோர் கீதம் உண்டு
இச்சை மாதர்கள் உண்டு
இவையெலாம் வேண்டான் தேவன்

94. பட்சியாய்ப் பறந்து ஓடிப்
பவளவாய் தன்னில் முத்தம்
உய்த்திட ஆவல் கொண்டு
உளமது வேக: பின்னர்
சிந்தையைச் சோர்வு சார
உடலதைச் சோர்வு சார
சிந்தனை விட்டான் தேவன்
சீக்கிரம் அயர்ந்து விட்டான்.

95. மொட்டு ரோஜாவைக் கண்டான்
மெல்லவே விரியக் கண்டான்
பட்டுபோல் விரிந்த ரோஜா
பொன்தாது பொக்கிஷத்தில்
அகலியா அழகுத் தெய்வம்
அமையவே கண்டான் தேவன

சுகமதே சேர்த்து வைத்த
பொற் கிண்ணிகையில் கண்டான்.

96. தேவனே, அமிர்தம் இந்தா!
தேன்மது, தெவிட்டா தென்றுள்
கோமனும் கையை நீட்டக்
கிண்ணமும் கிடைத்த தாங்கே
வெறியொடு வாயில் வைத்து
உறிஞ்சியே கிண்ணம் வீச
அறிவெலாம் மங்க, மதுவும்
விடமென அறியலுற்றுன்.

97. எழுந்தனன் உறக்கம் விட்டு
'வீண்கனு இன்று கண்டேன்
பொழுதுமே விடியு முன்னல்
புணர்ந்தவள் ஆள்வேன் திண்ணம்
வீண்கனு இல்லை என்றன்
விரகநோய் தீர்க்கும் எண்ணம்'
என்றவன் சொல்லி ஓடி
இயற்கையை மாற்றலுற்றுன்.

98. இயற்கையை மாற்றிக் கொள்ள
இளம் பிடிதாடி கொண்டான்
செயற்கையே செய்து கொண்டான்
செயல் குரல் மாற்றிக்கொண்டான்
எளியதோர் ஆடை சுற்றி
எளிய அக்குடிலை நாடி
பழிசெயச் சேவல் போன்று
பாபமே கூவு கின்றுன்.

99. சேவலின் சப்தம் கேட்ட
சொற்ப விஞடிக் கெல்லாம்
பாபமே அறிய வொண்ணுப்
புண்ணியன் கௌதமன் தன்

பொற் கொடி அயர்ந்ததாலே
பார்வையால் அணைத்துவிட்டுச்
சற்றுமே தயக்க மின்றி
ஏகினன் குடிலை விட்டு

100. பதிவெளி சென்ற உடனே
பதட்டமாய் உள்ளே சென்ற
மதியிலா மூர்க்கன் முற்றும்
அறிவெலாம் தூரத்தள்ளி
அதி அழகார ணங்கை
அண்மையில் கண்டு, பொங்கி
அகல் ஒளி ஊதிவிட்டான்
இருண்டதே இல்லமெல்லாம்.

101. ஒருகணம் ஓட விட்டால்
ஓடிடும் இன்ப மென்று
விருட்டென ஓடி அவளை
வாரியே அணைக்க முந்த
இருட்டினுல் தவறிக் காலால்
அகலியா கரத்தில் மிதித்தான்
சுருட்டியே வாரி எழுந்தாள்
சுடரில்லை, சப்த மில்லை.

102. 'கண்ணுளா தீபம் ஏற்றிக்
காண்போம் யாம் இன்பம்' என்றுள்
எண்ணுத எண்ண மெல்லாம்
ஏறிய பித்தன் சொல்வான்
குரலினைக் குசு குசுப்பி
'காதலி தீபம் ஏனே'
இதையவள் கேட்டாள் உடனே
உணர்ந்தனள் சூதை தவறை.

103. கணவர்தான் என்றுல் அவரும்
குசுகுசுப்பக் காரண மென்

குரல் எடுப்பில் போக்கிலுமே
வெடவெடத்த நடுக்கமு மென்
மோகம் தணிப்ப தென்றல்
மோதி ஓடி வருவது மென்
தாபம் தவிர்க்க ஒளி
தவிர்த்தது மென் சூதன்றே?

104. ஆபத்தைக் கண்டாள்: அந்தோ
அணங்கு பதை பதைத்தாள்
ஆபத்திணல் தொண்டையும்
வாயும் அடைக்கலுற்றாள்
காமம் தலைக் கேறிடும்
கயவன் இவன் பாய்ந்தான்
பாபம் ஒன்றும் நேரவில்லை
பாவை தனைக் காத்தாள்.

105. பாவை உயிர் உள்ள வரை
பங்க மொன்றும் நேராதே
பூவைப் பறிக்க வந்தான்
பூவின் முள் தைத்திட்டதே
அப்பொழுது மங்கே ஒளி
அணை ந் திருந்தது மீண்டும்
சட்டென எழுந்து ஓங்க
சட்டென அவன் விடுத்தான்.

106. கௌதமன் விளக்குத் தூண்டிக்
காண்பது கனவா ஐயோ
கௌதமன் வாழ்க்கை விளக்காய்க்
காதலைக் காட்டி ஒளிர்ந்த
அகலிகை அன்பா இன்று
அணைந்தது, ஐயோ, பாவம்!
அகலிகை களங்க மற்றே
ஒளிர்வதும் அறிய நேரான்.

107. புருஷனைக் கண்ட பெண்ணும்
புத்துயிர் பெற்ருள் : ஓடி
அருமையாய் அவரின் பாதம்
அணைத்திடப் பாபி என்று
அவனவள் முகத்தை தள்ள
அன்பினள் வசமிழந்தாள்
அவளவன் சொன்ன சொற்கள்
அறியவும் அறி விழந்தாள்.

108. கொண்டவன் கண்ட தேவன்
கைகளைப் பிசைந்து மெல்ல
வந்ததோர் வழியே கள்ளப்
பூனைபோல் பதுங்கிப் போனன்
பழி வாங்க வந்த தேவன்
பழி முடியாது போனன்
சதியினைல் சென்ற கணவன்
பழியையே காண வந்தான்.

கௌதமன்

109. "என்னை அவன் ஏய்த்தான்
என் இதயம் சுடிட்டான்
அவனை உலக மெல்லாம்
ஒன்ருகத் தாக்காதோ
கண்ணுயிரம் கொண்டு
காற்றசைக்கு மிட மெல்லாம்
என்னமோ தீங்கு வரும்
என்றவனும் ஏங்கட்டும்"

110. விட்டகன்ற தேவன் விட்ட
விலைதாடி கண்டு விட்டான்
"திட்டமிட்டு என்னை ஏய்த்த
தீனர் உமை விடுத்துக்

கட்டமில்லா ஓரிடத்தில்
கழிப்பேன் என் வாழ் நாளை
இட்டம் விட்டாய் என்மேல்
இடம் விட்டேன் நான் இன்றே.

111. மெய்தாடி சலித்திட்டாய்
பொய்தாடி ஏற்றாய் நீ
பொய்தாடிக் காரனினி
புனைய வேண்டாம் வேடம்
கருத் தொரு மித்தீர் நீர்
களங்கமுற்றாய் பெண்ணே
சிறுத்தேன் பாவி நான்
சுவைத்திடுவீர் : செல்கின்றேன்.

112. உன்றனுக்கும் என்றனுக்கும்
ஒரு வித பிணைப்பில்லை
வெந்தழல் நீ யானாய்
விடமானாய், வாளானாய்
கல்லாய் உனை மதித்தேன்
கல்லுனை நான் வீசிவிட்டேன்
பொல்லாத கள்ளி நீ
-பாபத்திரள் பெண்ணும்-

113. பொட்டிட்டுப் பூமுடித்துப்
பொன்னால் அலங்கரித்துப்
பட்டிட்டுக் காதலிட்டுச்
சித்திரித்தேன் உன்னைக்
கட்டிக்கல கலத்துக்
காதல்தரேன் என்று சொல்லிக்
கொட்டினாய் என் கண்ணில்
மண்ணையடி பெண்ணே

114. விட்டேன் உலகாசை
விட்டேனிந்தச் சுமையை

வீட்டேன் உலகின்பம்
விட்டேன் உனதாசை
விட்டேனி ந்தக் குடிலே
விட்டேன் எனதெல்லாம்
தொட்டேன் தனி வாழ்வு
தார மில்லா வாழ்வு.''

115. சோர்வை யெலாம் கண்டு
சுகமின்மை நிதம் கண்டு
சோர்ந்திட்ட சித்தார்த்தன்
சோதிக்க எண்ணினன்
துயில் கொள்ளக் காதலி
தருணமே இது வென்று
அவள் எலாம் விட்டு
அகன்றனன் நள்ளிரவில்

116. தரித்திரம் வாட்டிடத்
தேர்ப்பாகன் ஆகிட
சரித்திரம் சொல்லுமோர்
சந்திரவம் சத்தினன்
பாழ் மண்டபத்தில் தான்
பற்றிய மங்கையைக்
காடென்று கூசாது
காரிருளில் விட்டகன்றான்.

117. குழலெனக் குயிலெனக்
கனியென மணியென
நிலவென மயிலென
நலமென உயிரெனக்
கொண்ட இக் கௌதமன்
கொடிதெனக் கல்லெனக்
கண்மணியைக் கைவிட்டுக்
காரிருளில் போந்தான்.

118. சீர் கொண்ட திருவும்
சுபம் கொண்ட விழியும்
வீறுண்ட புயமும்
வில் கொண்ட தோளும்
ஏறெருத்த நடையும்
இருசெல்வர் கொண்டு
தேரின்றி வந்தார்
துணைசேர முனிவன்.

வேறு

119. காட்டில் குடில் அமையக்
காரணம் தான் என்ன
வீட்டில் இருப்பது தான்
யாரோ என வேண்ட
பாட்டில் உரைத்த வெல்லாம்
மாமுனிவன் சொன்னன்
ஏட்டில் அடங்கிடுமோ
ஏழை யவள் துன்பம்.

ராமன்

120. "குறையிலா மாது ரத்னம்
குறைவுறு வாழ்க்கை வாழ
நிறைமதி மிக்குணர்ந்தோன்
மறைந்துமே வேறு வாழ
முறையிலே சரி நாம் செய்வோம்
முறையினற் குறையை நீக்கி
நிறைந்திடும் அவர்கள் காதல்
நேர்ந்தன நேரிற் சொல்ல."

121. பதியினை மனத்தில் கொண்ட
பத்தினிதெய்வம் அகல்யா
அதிபதி அயோத்தி ராமன்
அவனுமே என்று தேர்ந்து

சதிபதி சஞ் சலத்தைத்
தீர்த்தருள் ஸ்வாமி என்று
பதமலர் தொட்டுக் கண்கள்
புனலினைப் பெய்தாள், வீழ்ந்தாள்.

122. அவளவன் பாதம் தொட்டாள்
அன்றொரு கல்லின் நிலையும்
அகலவே அன்பன் ராமன்
அனுக்கிரகமே புரிந்தான்
கல்லென மதித்தே உன்னைக்
கணவரும் விட்டுச் சென்றார்
கல்லிலை, வைரம் என்று
ஏற்க நான் செய்வேனென்றான்.

கௌதமருக்குச் சொல்லி அனுப்ப வருதல்

123. ஏற்கவா வந்தான் இல்லை
ஏற்கவே வந்தா னென்றால்
பார்க்கவே இல்லை அவளைப்
பதியினைக் கண்ட அகல்யா
தோத்திரம் அகத்தில் செய்து
துணைவனைக் கண் கொடணைத்தாள்
தூற்றவே வந்தான் குறையைத்
தன் நிலை தூக்க 'வந்தான்.

124. ஏக்கமே அவளின் உடலை
இளைத்திடச் செய்த துண்டு
தூக்கமும் விட்ட கண்கள்
தீபம் போல் சுடரவில்லை
பார்க்கவும் பழைய வாழ்க்கை
பலவித பொருள்கள் எல்லாம்
தாக்கின துன்ப அலைகள்
தலையுடன் கிறுகிறுக்க.

கௌதமன்

125. "ரகு குலத்திலக! மன்னா!
என்னை நீர் அழைத்தீரென்றார்
மகுடமொழி ஏற்றேனுடனே
மகிழ்ச்சியோடும்மைச் சேர்ந்தேன்
சுகிர்தம் ஒன்றறியா ஏழை
செய்வதற் கெதுவும் உண்டோ
மிகமிக பாக்ய சாலி
ஆகினேன் உம்மைக் காண."

ராமன்

126. "பழிசெயும் பாழும் உலகில்
பழிசெயா உயிரும் ஒன்று
பழிச்சுமை தாங்கி நிற்கப்
பார்ப்பது பழி தானன்றோ
விழிப்புனல் கொட்டுகின்றாள்
உன்னையே அகத்தில் வைத்து
வழியெலாம் பார்த்து நின்றாள்
உம்மைத்தான் வரவே காணோம்

127. பத்தினிப்பெண்தான் அகல்யா
பதியென ஏற்பாய், நண்பா
சத்தியம் ஜெயத்தை நாட்டும்
சிந்தையின் சலனம் விடுவாய்
அத்தினம் நடந்த தெல்லாம்
அறிவேன் யான் நீதான், அந்தோ
வித்தியாசமாய் நினைத்தாய்
விதி செய்த சதிதான், அன்பா!"

கௌதமன்

128. "பழிச்சுமை சாட்டினோனை
பார்த்தது பொய்யா, மன்னா!

விழிகளும் கண்ட துண்மை
விழிகளும் என்னை ஏய்த்துப்
பழிக்கவே செய்தவென்ருல்
நொடிக்கணம் அவைகள் பிய்த்துப்
பழிக்குநான் பழியே செய்வேன்
பார்த்தது அந்தோ உண்மை

129. புனல் அவள் விட்டுத்தேவன்
பேசியது பொய்யுமாமோ
இவள் அதை மறைத்து மனதில்
இருத்தினது பொய்யுமாமோ
குரல் அவன் மாற்றிச் சேவல்
கூவிடல் பொய்யுமாமோ
இவள் கரம் விட்டான் ஒளியில்
இவையெல்லாம் பொய்யா, மன்ன?

130. நிதம் நிதம் இருவர் சேர்ந்து
நேசமாய்க்கூடி வாழ்ந்தோம்
நிதம் நிதம் இருவர் சேர்ந்து
நற்புனல் ஆடி வந்தோம்
அன்று நான் கவிதை யொன்று
ஆர்வுடன் புனையக் கண்டு
"சென்று நான் வாரேன்," என்ருள்
"சிந்தையை எழுத்திற் பொறிப்பீர்."

131. அவளின் தீஞ்சொற்கள் கேட்டு
அன்பினல் ஆர்வம் மீற
பவளக்கவி கோக்குந் தோறும்
பாச நூல் பெறுகி ஓடும்
நேரமும் ஓடும் மாலை
நகரவும், வெளிச்சம் கம்மும்
ஆரத்தை வைத்தேன் நேராய்
அடையவே புனலை, அவளை

132. பொற்கொடி காணே மென்று
புண்மனம் ஆகி ஓட
அற்பனை அருகில் அன்று
அவளுடன் கண்டேன்: ஒன்றும்
சொற்களே சொல்லவில்லை
சோர்வுடன் மஞ்சம் சாய்ந்து
சிற்பியான் குருடன் என்று
சார்ந்தனள் துயிலே போலும்.

133. சிற்பியான்! சிந்தை சொல்லச்
சொல்லுரு சமைக்கும் சிற்பி!!
அற்பன்யான் ஏழை: அகிலம்
ஆண்டிடும் அதிபனில்லை
சிற்றிடம் சிறியேன் கொண்டு
சுவர்க்கமே என்றிருந்தேன்
பற்றினள் பெரிய மன்னன்
பொன்புகழ் வானின் வேந்தை

134. என்றுமே என்னைக் கூடி
இன்பமே ஊட்டி, அந்நாள்
ஒன்றுமே உரைத்திடாது
உறங்கவே சென்றாள்: ஆனல்
என்மனம் கெட்டவெண்ணம்
ஏற்கவேயில்லை: நானும்
கண்துயில் கொள்ளு மட்டும்
கண்டவள் அழகில் சொக்க.

135. அவன் அவள் சேர்ந்துகண்ட
நினைவெலாம் கனவாய்க்காணத்
துயில் விடுத்துருளு கின்றேன்
துஞ்சவும் மனமுமில்லை.
நிமிஷமும் யுகமாய்ச் செல்ல
நேரமும் உணர வில்லை

அகிலமும் அடங்கி உறங்கும்
அவளுறும் துயில் பாசாங்கோ.

136. பொழுதுமே புலரும் நேரம்
பக்கமோ என்று ஏங்கித்
தொழுது நான் காலை நோக்கித்
தவித்திட்ட போது தேவன்
சேவலாய்க் குரலை மாற்றிச்
செப்பிய விந்தை கேட்டேன்
ஆவலாய்க் குடிலை விட்டேன்
அண்மையில் புனலைச் சேர.

137. இருள் இனும் குவலயத்தைக்
கவித்திடவே காரணம்என்
இருளினில் மீன்களெல்லாம்
இமை மூடா திருப்பதுமென்
தவறி நாம் வந்துவிட்டோம்
தொலைந்திலதிரவு மென்றே
தவறை நான் தவிர்ப்பதற்கு
என்குடில் மீண்டும் சார்ந்தேன்.

138. என் குடில் சார்ந்தேன்: உள்ளே
ஏற்றிய விளக்கைக்காணேன்
அண்மையில் ஏதோ சப்தம்
அசையவே கேட்டேன்: அப்பால்
சடுதியில் விளக்கை ஏற்றி
இருளினை வெட்டி வீழ்த்த
கெடுதியைக் கண்டேன்: மன்னு!
கெடுமகன் இவனை விட்டான்.

139. பூங்கொடி தொட்டில் நட்டுப்
பண்புடன் நீரை விட்டுப்
பசுந்தளிர் செழிக்க விட்டுப்
பெருமையாய்க் காத்து வந்தேன்

செவ்விதழ் பூக்கள் பூத்துச்
சுவைக்குமே என்றிருந்தேன்
அவ்விதழ் அழகு விசக்
கற்புதான் கமழ வில்லை

140. உலகத்தை உதறித் தள்ளி
உயிரையே அவள் பால்வைத்துச்
சகலமும் நீயே என்று
சுவர்க்கத்தைக் கண்டிருந்தேன்
உலகம்தான் எய்க்கு மென்றல்
இவளும்தான் ஏய்த்தாள் அந்தோ
உலகமும் இவளும் ஒன்றே
வகுப்பினர்: இதை மறந்தேன்.

141. அசைவிலா திருந்த புனலை
அறைந்துதான் அலைத்ததே போல்
திசையெலாம் கற்கள் வீழ்ந்து
தகர்த்தது மோன நிலையை
இசையெலாம் இன்ப மெல்லாம்
இவளே தான் என்றிருந்தேன்
விசையினில் வீணை இவளை
ஒருவன் வந்தடித்துப் போனான்

142. நேர்மையில் தேர்ந்த ராமா
நேர்மையில் கெட்டாள் அகல்யா
சேர்ந்து நாம் வாழ்ந்த வாழ்வு
சுவர்க்கத் தைக்காட்டி விட்டுச்
சூழ்ந்திடும் கொடுமை, இன்னல்
நரகிலும் வீழ்த்த வீழ்ந்தோம்
நேர்வழி ஒன்றும் காணோம்
நவிலவு மாமோ துன்பம்"

143. பதிஅவர் உள்ளம் வெந்து
பகர்ந்த வெஞ் சொற்கள்கேட்க

மதியெலாம் மங்கலுற்றுள்
மனமுமே கலங்கலுற்றுள்
விதியினை நொந்து நின்றுள்
வேதனை வாட்ட நின்றுள்
சுதினமும் வருவ தெப்போ?
சொரியும் நீர் நிற்பதெப்போ?

144. பதியினைப் பார்க்க அணைக்கப்
பொருமுதே உள்ளம், கானல்
நதியினைப் பெருக்கும் விழிகள்
நாணுதே முகத்தைக் காண
அடிகளைக் கண்டாள்: அன்று
அவர்சிரம் மோதித் தள்ளி
இடித்ததை எண்ணலுற்றுள்
புழுவெனத் துடித்தாள் ஏங்கி.

145. அன்பெலாம் உருவாய் வந்து
அமைந்திடும் வீர ராமன்
கண்களை நம்பி உண்மைக்
காதலை நம்ப முடியா
அன்பனைக் கண்டே அப்பால்
அகற்றினன் அன்பு விழிகள்
புண்மனம் ஆகிப் புழுவாய்த்
துடித்திடும் பெண்ணைக்காண.

ராமன்

146. "பெண்மணி, மாதர்க் கரசி
பார்த்தவை கேட்கலுற்றுய்
உன்பழி உண்மை யில்லை
என்பதை உரைப்பாய் அம்மா!
உன் உரை செப்பக் கேட்டு
உண்மையும் கண்டு உன்றன்

கண்மணி கணவர் மீண்டும்
காதலின் மாண்பு காண்பர் ''

147. என்றவை கேட்டாள் : என்றன்
இடரெலாம் தீரும் காலம்
இன்றுதான் வந்த தென்று
ஏக்கத்தைச் சிறிது விட்டுப்
பிந்திய நிகழ்ச்சி யெல்லாம்
தீர்க்கமாய் வரிசையிட்டுச்
சுந்தரி சொன்னாள் : பணிவும்
பரிவுமே செறிந்த சொல்லில்

அகல்யா

148. ''பாருயிர் காக்கும் புனிதா !
பதியெனைப் பார்க்கக் கூச
ஆருயிர் நேயா என்று
அழைக்கவும் கூசுகின்றேன்
நடந்ததைச் சொல்லுகின்றேன்
நடப்பதும் என்ன வாமோ
நடத்தை நான் கெட்டேன் என்றால்
நான் உயிர் விடுவேன் திண்ணம்.

149. நாயகன் அன்பால் வளர்த்த
நற்கொடியாக நின்றேன்
நாயகன் என்னைத் தாங்க
நற்பொலிவோடு நின்றேன்
நாயகன் கண்கள் நம்ப
நானவர் களங்க மானேன்
நாயகன் கொம் பிலாது
நானொரு துரும்பு மானேன்.

150. கண்டது மெல்லா முண்மை
கேட்டது மெல்லா முண்மை

கொண்டது மனத்திலே தான்
கொஞ்சமும் பொருத்தமல்ல
அவன்ர நான் நோவ வில்லை
அவதூறு சொல்லவில்லை
அவரெல்லாம் கேட்பாரென்றே
அன்றவர் அடியில் வீழ்ந்தேன்.

151. ஆருயிர் பாபி என்று
அறையலும் மூர்ச்சையானேன்
வேருடன் வெட்டி வீழ்த்த
உயர்மரம் போன்று வீழ்ந்தேன்
யாரிடம் சென்றே என்றன்
இழிவினைப் போக்க வல்லேன்
ஆருயிர் கண்டு உண்மை
உரைக்கவே உயிரை வைத்தேன்.

152. என்னை ஏன் படைத்தான் பிரமன்
என்னோடேன் அழகைப் படைத்தான்
மண்ணோடு மண்ணாய் நானும்
மாறியே போயிருந்தால்
புண்ணிலே கோலை யிட்டு
ஆட்டுதல் போலு மிந்த
அந்நிய வார்த்தை யெல்லாம்
அறைவரா, என்றன் நாதன்?

153. என்ன நான் சொன்னேன், அந்தோ
அறிவெலாம் மங்கலாச்சே
அன்று நான் அரைக்கணத்தில்
ஆவியைத் துறந்திருந்தால்
அவர் பழிகாரர் என்று
அவனி நொந்திருக்கு மன்றோ
அவர்மனை குற்ற மென்றும்
அவரையே சூழு மன்றோ.

154. என்கதை கேளும்: கேட்டே
என்னைநீர் போற்றும்: இன்றேல்
என்னைநீர் தூற்றும்: ஓர் நாள்
எழிலுறும் சோலை தன்னில்
கன்னி நான் தனித்திருக்கக்
கண்டனன் காம வேந்தன்
கண்ணியம் கெட்ட வேந்தா
தேவர்கோன் ஆவன்? காமி.

155. காமத்தீ வாட்டு தென்பான்
காதலால் அவிப்பா யென்பான்
பாபமே பேசு கின்றாய்
பத்தினி காத்திருக்காள்
நேசனாய் நினைத்தேன், ஆனால்
நேர்மை நீ விட்டாய், தேவா
மோசமாய்ப் பேச வேண்டாம்
மதியொடு வாழ்வா யென்றேன்.

156. இச்சொலே இறுதியில் நான்
அவனிடம் சொன்னேன், கன்னி
இச்சொலால் கட்டுப்பட்டான்
என்றெண்ணி நானும் முற்றும்
அன்று நடந்ததெல்லாம்
அப்போதே விட்டொழித்தேன்
இன்றும்மைக் கேட்கின்றேன் யான்
இக்குற்றம் யார் குற்றமோ?

157. அவனை நான் அதற்குப் பின்னால்
பார்த்ததும் அன்றே: என்றன்
கணவரும் எம்மைச் சேர்த்துக்
கண்டதும் அன்றே: அவனும்
வேசிபோல் என்னை அணையச்
சொன்னதும் அன்றே: நானும்

தூசியாய் அவன் மதித்துத்
தூற்றியே நின்ற தன்றே.

158. கணவனைக் கண்டான், உடனே
காற்றெனப் பறந்தே போனான்
கணவனைக் கண்டேன் : மனதில்
சுருக்கெனத் தைத்த தொன்று
ஒருவரு மில்லாக் காட்டில்
ஒருவனே டென்னைக் கண்டால்
உருப்பெறும் கெட்ட எண்ணம்
என்னுமோர் மின்னல் தாக்க

159. கணவனும் கண்டார் என்னைக்
கைக்குடம் வாங்கிக் கொண்டார்
மனத்திலே மாசு மில்லை
முகமுமே மலர்ந்து காட்டும்
அருமையாய்ச் செய்த கவிகள்
அருமையாய்ப் பாடி வந்தார்
அருமையைக் குலைக்க வேண்டாம்
என்றெண்ணிக் கேட்டு வந்தேன்.

160. குற்றமே புரிய வந்த
கொடுமகன் காமந் தன்னை
முற்றுமே சமய மோர்ந்து
மொழியவே இருந்தேன் : அன்பர்
உற்றதை உடனே கேட்டால்
உடல் உயிர் துடிக்குமென்று
பற்றிட அச்சம் துன்பம்
பேசவே இல்லை அன்று

161. மூர்க்கமும் முகமும் சொல்லும்
மீறிய காம வீச்சும்
போர்க்களமாக்க மனதைப்
பயமெனும் குருதி வெள்ளம்

கரைபுரண் டோடு தையோ
　　கவலையும் பற்றுதையோ
உரைக்கவும் வாயுமில்லை
　　கண்களும் இருட்டுதையோ.

162. அன்பரின் பேச்சை விட்டு
　　அவர் இதழ் இன்பம் விட்டு
வெந்துநான் துடிதுடித்து
　　ஓரமாய் ஒடுங்கலுற்றேன்
அன்பரும் பேசிப் பார்த்தார்
　　பேசவும் பார்த்தேன் நானும்
கண்கள் நீர் பெருக்கி ஓடத்
　　தொண்டையும் அடைத்துப் போச்சு.

163. கடைசியில் கண் அயர்ந்தேன்
　　கைமிதியட்டெ ழுந்தேன்
உடையவர் தானே என்று
　　விளக்கொளி வேண்டுமென்றேன்
விளக்கொளி எதற்கோ என்று
　　வந்தவன் முணுமுணுக்கத்
திடுக்கிட்டுச் சூழ்ச்சி கண்டு
　　எழுந்து நான் பதுங்கலுற்றேன்.

164. குறையிது கண்டேன் என்றார்
　　குறைகளை எடுத்துச் சொன்னார்
முறையிலா மூர்க்கன் மாற
　　மொழிந்த என்முறை குறைவா?
இரையெனை யாக்கத் துணிந்த
　　இந்திரன் செயல் என்குறைவா?
குறையதைத் தடுத்து வீருய்
　　எதிர்த்ததும் குறையுமாமோ?

165. கெடுதியைக் கண்டேன் என்றார்
　　கெடுதி நான் செய்ததென்ன?

இருட்டினில் என்னைப் பற்றி
இச்சையைப் போக்க வந்த
வெறியனின் கரத்தினின்றும்
விடுவிக்க முயன்றேன் அதுதான்
கெடுதியோ? மன்னு சொல்லும்
குற்றமோ? குறையுமாமோ.?

166. வெறியனும் என்னைப் பற்ற
முனைந்துமே இருட்டில் பாய
கரிந்தது அவன் முயற்சி
விளக்கொளி உடனே வீசப்
பற்றிய கரத்தை உடனே
பதட்டமாய் விட்டான்: அப்பால்
சுற்றிடும் என்றன் சிந்தை
சுழல்வதைக் கண்டேன்'' என்முள்.

167. என்றலும் கௌதமன் தன்
மௌனமும் விட்டேயோடி
"கண்மணி, களங்க மற்ற
கற்புநீ!'' என்று சொல்விக்
கண்களில் நீரை விட்டுக்
கரங்களில் அவளை ஏற்று
அன்பினைக் கொட்டிக் கொட்டி
அணைத்திட இருவர் சேர்ந்தார்.

16.8. கண்களும் தழுவத்தழுவ
கைகளும் தழுவத்தழுவ
உள்ளமும் தழுவத்தழுவ
ஊனுமே தழுவத்தழுவ
•அதரங்கள் தழுவத்தழுவ
அகமுமே தழுவத்தழுவப்
பதுமையே போல வாங்குப்
பற்றியே ஒருவரானுர்.

சுபம்.